Asian Journal of Innovative Research. 3(4) 1-2 (2018)

ISSN 2455 7285

ASIAN JOURNAL OF INNOVATIVE RESEARCH
Available online at http://www.asianjir.com

ஆராய்ச்சி கட்டுரை தமிழ்

*பெறப்பட்டது 02 ஆகஸ்ட் 2018;*
*ஏற்றுக்கொள்ளப்பட்டது 09 செப்டம்பர் 2018*
*ஆன்லைன் செப்டம்பர் 2018*

# வர்மம் தீர்க்கும் மருந்துகள்

**க. சித்ரா**

**சுருக்கம்**

மனிதனுக்கு வர்மத் தாக்குதலினால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. அந்நோய்களுக்கு வர்ம மருத்துவ முறையில் பக்க விளைவுகள் இல்லாத மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர். வர்மத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளிக்குக் கஞ்சி, கசாயம், தைலம், எண்ணெய், சூரணம் போன்ற பல்வேறு மருந்து வகைகளைப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிந்தது.

***முக்கிய வார்த்தைகள்:*** வர்மம் தீர்க்கும் மருந்துகள், வர்ம மருத்துவ முறை

**முனைவர் க. சித்ரா**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு பெண்கள் கல்லூரி
ஒரத்தநாடு – 614 625

***Citation*:** **க. சித்ரா** (2016) வர்மம் தீர்க்கும் மருந்துகள். Asian Journal of Innovative Research 3(4) 01-02.

## முன்னுரை

வர்ம மருத்துவத்தில் கஞ்சி, கசாயம், தைலம், தடவுதல், எண்ணெய், ஒற்றடம், பொடி, பூச்சு, எலும்பு முறிவு கட்டு ஆகிய மருந்து வகைகளின் செய்முறைகள் பற்றி அறிய முடிந்தன.

**“சொன்னேனடா கஞ்சிமுதல் கசாயந் தானும்**
**சுகமான தைலமுடன் முக்கூட்டெண்ணை**
**மன்னவனே ஒற்றலொடு பொடியும் பூச்சும்**
**மகத்தான ஒடிமுறிவு அசைவு கெட்டி**
**நன்னயமாய் பத்தியமுறையும் சொன்னேன்**
**நலமான கைமுறையும் செய்முறையும் சொன்னேன்**
**பேதகமாய் போகாமல் பிடிக்கச் சொல்வேன்” (வர்மசூத்திரச் சுவடி, பா-93)**

என்ற பாடல் வரியின் மூலம் அறியலாம்.

## வர்மத்திற்கு கஞ்சி

திரிகடுகு, திப்பிலி ஆகியவற்றைத் துணியில் முடிச்சாகக் கட்டி நீரில் போட்டுக் காய்ச்சி எடுத்து அதைத் தொடர்ந்து பத்து நாள் அருந்த வேண்டும். மேலும் திரிகடுகு, அதிமதுரம், திப்பிலி, சீரகம், குன்றிவேர், அறுகம்புல் வேர், இலவங்கம் ஆகியவற்றையும் சேர்த்துக் வர்ம பாதிப்பு உள்ளவர்கள் கஞ்சி வைத்துக் அருந்தினால் நோய்க்கு தீர்வு காணலாம்.

## கசாயம்

உலர்ந்த சுக்குகளை ஒன்றிரண்டாகப் பொடித்துப் போதுமான நீர் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் கொள்வதே குடிநீர் செய்யும் முறையாகும்.

## அமுக்கிரா கசாயம்

அமுக்கிரா, சடமாஞ்சில், சித்தரத்தை, அதிமதுரம், ஏலம், சந்தனம் இவற்றுள் வகைக்கு இரண்டு வீதம் எடுத்துப் பொடித்துக் கொள்ளவும். மேலும் சாரணைவேர், வில்வவேர், சிறுசனிவேர், குறுந்தொட்டி வேர், எருக்கன்வேர் முதலியவற்றையும் வகைக்கு ஒரு படி அளவு எடுத்து இடித்து தூளாக்க வேண்டும். இந்த இருவிதமான

கிழங்கு மற்றும் வேரின் தூள்களை ஒரு லிட்டர் தண்ணீரில் நான்கில் ஒரு பங்காகச் சுண்ட வைத்துக் காய்ச்சி இதில் சிறிதளவு சர்க்கரைச் சேர்த்துக் குடிக்கக் கொடுக்க வேண்டும். இந்த அமுக்கிரா கசாயத்தை அருந்த வர்மம் எல்லாம் குணமாகும் என்பதை அறியமுடிகின்றது.

**குமரி எண்ணெய்**

சோற்றுக்கற்றாழை ஒரு படி, தரமான பசுவின் நெய் ஒரு படி, சீரகம், ஏலம், சுக்கு வகையான திப்பிலி, அதிமதுரம் இவை எல்லாம் பொடி செய்து எண்ணெயைச் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கொண்டு, இதை ஒடிவுமுறிவு உள்ள இடத்தில் பூசி வந்தால் நோய் விலகும்.

**தேரையர்த் தைலம்**

வசம்பு, வெண்பூண்டு, வேப்பவேர், வேலிப்படுத்தி, நாயுருவி, விடத்தேர், நத்தைச் சூரி இவற்றின் சாற்றோடு, நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிக்கட்டவும். இத்தைலம் குத்தலையும், குடைச்சலையும் நீக்க சிறந்த தைலம் எனலாம்.

**சூரணம்**

உலர்ந்தவேர், கிழங்கு, பட்டை, கட்டை, இலை, பூ, வித்து, பிசின் முதலியவற்றையும், காரசாரப் பொருள்களையும் இடித்து மெல்லிய துணியால் அல்லது நுண்ணிய சல்லடையால் அரித்தெடுப்பது சூரணம் எனப்படும்.

**வர்மச் சூரணம்**

இஞ்சி, சீரகம், சுக்கு, மல்லி, ஏலம், திப்பிலி, சித்தரத்தை, வால்மிளகு, கோரோசனை, அதிமதுரம் ஆகியவற்றை வகைக்கு 25 கிராம் வீதம் எடுத்து நன்றாக இடித்து சூரணம் செய்யவும். இதில் சிறிதளவு சர்க்கரைக் கலந்து சாப்பிட்டு வரவும். இவற்றில் தீரும் நோய்கள் நெஞ்சுவலி, நெஞ்சு எரிச்சல், புளிப்பு, மாந்தம், கொடிய வர்மங்கள் எல்லாம் தீரும் என்பதை உணரலாம்.

**பூச்சு**

உளுவை, நத்தை சூரி, புழுக்கொல்லி இந்த மருந்துகளை எடுத்து உதியன் பட்டைச் சாற்றில் நன்றாய் அரைத்து முறிவு உள்ள இடத்தில் பூசலாம்.

**வீக்கங்களுக்குப் பூச்சு**

கெருடக்கொடி, நஞ்சறுத்தான், வசம்பு, மிளகு இவற்றை சம அளவு எடுத்து சிறு நீர்விட்டு மைபோல் அரைத்து அடுப்பில் காய்ச்சி வெந்து குழம்பானதும் இவற்றை எடுத்துப்பூசி வந்தால் வீக்கம், வர்மம், கரப்பான், நீர்த்தோசம், மூட்டுவலி, காய்ச்சல் இவை எல்லாம் தீரும்.

மனித உடலில் உண்டாகும் பல நோய்களுக்கு மருந்து செய்முறைகளைக் கொண்டு நோய்கள் தீர்க்கப்படுவதை அறியமுடிகிறது. நோயாளியின் நோய்க்கு ஏற்றவாறு மருத்துவர் மருந்துகள் கொடுத்து வருகின்றனர் என்பதை அறியமுடிகின்றன.

**ஆதாரமாக பயன்படுத்துவது**

1. அ.மரியசோசப், சித்தமருத்துவம் தொகுதி-3
2. சீதாராம் சுப்பிரமணியம், வர்மக்கலையும் வைத்தியமும்
3. எஸ்.சிதம்பரதாணுபிள்ளை, வர்ம மாத்திரை
4. எஸ்.சிதம்பரதாணுபிள்ளை, வர்மத்தீர்ப்பு
5. எஸ்.எம்.அலெக்சாண்டர் ஆசான், வர்மக்கலை களஞ்சியம்